ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,618 — 1958 දෙසැම්බර් 19 වැනි සිකුරාදා — 19.12.1958

11,618 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## துணைவிதிகள்

L.G.D.—G.D.9/75A.

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி யாழ்ப்பாணம் மாவட்டத்து தெல்லிப்பளை கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ " கெசெற் "றில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின் (3) ம் உட்பிரிவு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சர்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு, அவரால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள்.

வீ. சி. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1958 ம் ஆண்டு டிசெம்பர்மீ 6 ந் உ.

### உபவிதிகள்

#### கட்டிடங்கள் நிர்மாணித்தல்

1. கிராமப் பகுதிக்குள், எவரேனும், கிராமச் சங்கத்தால் பராமரிக்கப்படும் தெரு அல்லது பாதை எதனதும் மத்தியிலிருந்து பதினைரை அடி தூரத்துக்குள் புதிய கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும் நிர்மாணிக்கவோ அல்லது கிடங்கு அல்லது கிணறு எதையும் தோண்டவோ கூடாது.

2. எவரேனும் அதுபற்றி தலைவருக்கு எழுத்தில் முப்பது நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் கொடுக்காமல், 1 ம் உபவிதியில் சொல்லப்படும் தெரு அல்லது பாதை எதனதும் ஓரமாக கட்டிடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும் நிர்மாணிக்கவோ அல்லது கிடங்கு அல்லது கிணறு எதையும் தோண்டவோ கூடாது.

#### உத்தியோகத்தர்களும் வேலையாட்களும்

3. சங்கத்துக்கு வருமதியான எல்லா வரிகளையும் அல்லது கட்டணங்களையும் தண்டுவதற்கும் தமது கையொப்பத்தின் பிரதி லிபியையும் சங்க முத்திரையையும் கொண்ட பற்றுச்சீட்டுகளை வழங்குவதற்கும் உத்தியோகத்தர் அல்லது பிறர் எவருக்கும் தலைவர் எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

4. எவரும் வேண்டுமென்று—

(அ) தலைவரையாவது அல்லது சங்கத்தின் வேறு உத்தியோகத்தர் எவரையுமாவது கிராம சமுதாயச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் உண்டாக்கப்பட்ட உபவிதிகள் எதனுனும் அல்லது எதன்படியும் அந்த தலைவருக்கு அல்லது உத்தியோகத்தருக்கு கொடுக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட தத்துவம், கடமை அல்லது அலுவல் எதையும் பிரயோகிக்க நிறைவேற்ற அல்லது செய்ய விடாது தடுக்கலாகாது ; அல்லது

(ஆ) சங்கத்தால் அல்லது சங்கத்துக்காக வேலைக்கமர்த்தப்பட்ட வேலையாள் அல்லது தொழிலாளி எவரையும் தலைவரால் அல்லது சங்கத்தின் வேறு உத்தியோகத்தர் எவராலும் அவருக்கு இடப்பட்ட சட்டமுறையான கடமை எதையும் செய்யவிடாது தடுக்கலாகாது.

#### அபாயமான, அருவருப்பான வியாபாரங்கள்

5. கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

பைசிக்கிள் திருத்தும் கடை வைத்தல்.
இயந்திர சாதனங்கொண்டு மரமரிதல்.

#### வாகன, மிருகவரி பற்றிய உபவிதிகள்

6. (1) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி திரட்டும் வாகன மிருக வரியின் பொருட்டு, அந்த வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதும் சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான " அ " பத்திரத்தின் மாதிரியில் ஒரு விபர அட்டவணையை தலைவரிடம் கொடுக்கவேண்டும்.

(2) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி வரி செலுத்தப் பாத்திரப்பட்டவர் 1959 ம் ஆண்டுக்கான அட்டவணையை எழுதி நிரப்பி ஜனவரி மாதம் 31 ந் திகதிக்கு முன்னர் தலைவருக்கு அனுப்பவேண்டும். அவர் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் இனிவரும் எந்த வருடத்துக்கும் அத்தகைய அட்டவணையைத் தரும்படி கேட்கப்படமாட்டார்.

7. சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 6 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த ஒவ்வொருவரும் வேறு அறிவித்தலின்றி—

(அ) 1959 ம் வருடத்துக்கு, அவ்வட்டவணையில் சொல்லப்படும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் உரிய வரியை அவ்வருடத்து மார்ச் மாதம் முப்பத்தொராந் திகதிக்கு முன்னர் கொடுக்கவும் ;

(ஆ) இனிவரும் ஒவ்வொரு வருடத்துக்கும், அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்கள் மிருகங்களில் இனிவரும் அந்த வருடத்தில் முப்பது நாட்களுக்குமேல், தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருப்பனவற்றுக்கு உரிய வரியை அவ்வருடத்து மார்ச் மாதம் முப்பத்தொராந் திகதிக்கு முன்னர் கொடுக்கவும் பாத்திரராவர்.

8. எவரேனும் 6 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த பின்னர் அந்த அட்டவணையில் சொல்லப்படாததும் சட்டப்படி வரிக்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அல்லது 6 ம் உபவிதியின்படி அட்டவணை எதுவும் கொடுக்காத எவரும் முதல் முறையாக அவ்வரிக்குப் பத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அந்த

வாகனத்தை அல்லது மிருகத்தை அவர் வாங்கிய அல்லது வைத்திருக்கவேனும் அல்லது உபயோகிக்கவேனும் தொடங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அவ்விதம் வாங்கியதை, வைத்திருப்பதை அல்லது உபயோகிப்பதைக் குறித்து தலைவருக்கு எழுத்துமூலமான ஒரு அறிவித்தல் அனுப்பி இதன் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள " அ " பத்திரத்தின் மாதிரியில் எழுத்துமூலமான விபர அறிக்கை ஒன்றைக் கொடுக்கவும் வேண்டும்.

**9.** சட்டத்தின் **47(2)** ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, **3** ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்திருக்கும் ஒவ்வொருவரும் அந்த அறிக்கை எந்த வருடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த வருடத்துக்கும் அதற்குப்பின் வரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள அவருடைய சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அதன்பொருட்டு அறிவிக்கப்படும் காலத்துக்குள் வரி கொடுக்கப் பாத்திரராவார்.

**10.** (1) 6 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 8 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்தபின்னர், அந்த அட்டவணையில் அல்லது அறிக்கையில் பதிந்துள்ள அல்லது சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதற்கும் வரி கொடுக்கும் பாத்தியதையிலிருந்து தவிர்த்துவிடும்படி சட்டத்தின் **47 (3)** ம் பிரிவின்படி கோரும் ஒவ்வொருவரும் அவ்விதம் கோருதற்கான காரணங்களைக் காட்டி தவிர்த்துவிடுதற்கான தமது கோரிக்கை பற்றி தலைவருக்கு உடனே எழுத்தில் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

(2) 6 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 8 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர் எந்த மிருகத்தையும் அல்லது வாகனத்தையும் ஆட்சிபண்ணுமல்; வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல்விடும் ஒவ்வொருவரும், அந்த மிருகத்தை அல்லது வாகனத்தை தாம் ஆட்சிபண்ணுமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விட்டுவிட்டதாக உடனே தலைவருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

**11.** எவரேனும் வரி கொடுத்ததும், வரி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வாகனத்துக்கும் இதன் " ஆ " அட்டவணையில் காட்டியுள்ள வாகனங்களைப் பேதப்படுத்திக்காட்டும் எழுத்துக்களில் அந்த வாகனத்துக்குரிய எழுத்துக்களையும் அது எந்த வருடத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதிவு இடாப்பில் உள்ள அந்த வாகனத்தின் இலக்கத்தையும் கொண்ட உலோகத் தகடு ஒன்றை தலைவர் கொடுக்கவேண்டும். அத் தகடு எதுவும் பாவிப்பினுலாவது அல்லது வேறு விதத்தினுலாவது தெளிவாகத் தெரியாதுபோனுல் அல்லது உருவழிந்துபோனுல் அதன் சொந்தக்காரர், தலைவரிடம் அதைத் திருப்பிக்கொடுத்து ஐம்பது சதமும் கட்டினுல் புதிய தகடு ஒன்றைப் பெறும் உரித்துள்ளவராவார். அத்தகைய தகடு எதுவும் காணுமற்போய்விட்டது அல்லது களவாடப்பட்டுவிட்டது என்று சத்தியக் கடுதாசிமூலமாகவேனும் அல்லது வேறு வகையிலேனும் தலைவருக்கு நம்பிக்கை உண்டானுல் அவர் அதன் சொந்தக்காரர் அறுபது சதம் செலுத்தி விண்ணப்பிக்குங்கால் அவருக்கு ஒரு புதிய தகட்டைக் கொடுக்கலாம்.

**12.** ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தக்காரர் அல்லது ஒவ்வொரு வாகனத்துக்கும் பொறுப்பாளியாயிருப்பவர் **11** ம் உபவிதியின்படி அந்த வாகனத்துக்குக் கொடுக்கப்பட்டத கட்டை அந்த வாகனத்தின் துலக்கமான ஒரு பாகத்தில் மாட்டி வைக்கவேண்டும்.

**13.** ஏதேனுமொரு தெரு அல்லது பாதை வழியாகச் சென்றுகொண்டிருக்கும் எந்த வாகனத்தையும் அந்த வாகனத்தில் மாட்டி வைக்கவேண்டுமென்று **12** ம் உபவிதியால் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பார்வையிடுதற்பொருட்டு தலைவரேனும் அல்லது தலைவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரெவரேனும் நிறுத்துவதும் மறித்துவைப்பதும் நீதியாகும். அந்த வாகனத்தின் சாரதி அல்லது பொறுப்பாளி தலைவராலாவது அத்தகைய வேறு உத்தியோகத்தர் எவராலுமாவது கேட்கப்படுங்கால் அந்த வாகனத்தை நிறுத்தி, அவரை அத்தகட்டைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

**14.** யாழ்ப்பாணம் மாவட்டத்துக் கிராமச் சங்கங்கள் சிலவற்றுல் ஆக்கப்பட்டு, 1940 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ந் திகதி வெளியான 8,697 ம் இலக்க " கசெற் "றில் பிரசுரிக்கப்பட்ட வாகன, மிருக வரி பற்றிய உபவிதிகள், தெல்லிப்பளைக் கிராமச் சங்கம் சம்பந்தப்பட்டவரை, இத்தால் அழிக்கப்படுகின்றன.

**15.** இந்த உபவிதிகளில்—

" தலைவர் " சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

" சங்கம் " என்பது யாழ்ப்பாணம் மாவட்டத்துத் தெல்லிப்பளைக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;

" சட்டம் " என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனப் பொருள்படும்.

## அட்டவணை

### " அ " பத்திரம்

### தெல்லிப்பளைக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம்

**வாகன மிருகவரி பற்றிய உபவிதிகளின்படி கொடுக்கவேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் அறிக்கை**

சொந்தக்காரர் பெயர் : ————.

கிராமம் : ————.

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது இரண்டினதும் விபரம் | எண்ணிக்கை | குறிப்புகள் (பைசிக்கிள்களாயின் உற்பத்தியாளரின் இலக்கம் தருக) |
|---|---|---|
| பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் அல்லது றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இன வண்டிகளும் .. | ........... | ................ |
| இரட்டைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் | | |
| ஒற்றைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாணவண்டிகள் .. | ........... | ................ |
| றிக்ஷோக்கள் .. | ........... | ................ |
| கைவண்டிகள் .. | ........... | ................ |
| பைசிக்கிள்கள் .. | ........... | ................ |
| யானைகள் .. .. | ........... | ................ |
| குதிரைகள் .. .. | ........... | ................ |
| கோவேறு கழுதைகள் .. | ........... | ................ |
| கழுதைகள் .. .. | ........... | ................ |

எனக்குத் தெரிந்தவரையில் மேற்படி அறிக்கை உண்மையானதென்று நான் உறுதிகூறுகின்றேன்.

————,
சொந்தக்காரர் கையொப்பம்.

திகதி : ————.

### " ஆ " பத்திரம்

பாரவண்டி, பிரயாணவண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வண்டி ஒவ்வொன்றுக்கும் .. கி. ச. தெ. பா.

இரட்டைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. கி. ச. தெ. இ.

ஒற்றை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. கி. ச. தெ. ஒ.

றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. .. கி. ச. தெ. றி.

கைவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. கி. ச. தெ. த.

பைசிக்கிள் ஒவ்வொன்றுக்கும் .. . கி. ச. தெ. ச.

# நானாவித அறிவித்தல்கள்

**அக்கரைப்பற்று மத்திய பிரிவுக் கிராமச் சங்கம்**
**இறைச்சிக்காரர்பற்றிய சட்ட அறிவித்தல்**

இறைச்சிக்காரர்பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்பின் குறிப்பிடும், அட்டவணையிற் காண்போர்களிடமிருந்து 1959 ம் ஆண்டிற்கு " புச்சர் லைசென்ஸ் " தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்தக் கிராமச் சங்க இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும், லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினால்; மறுப்புக்கான காரணங்களை 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 26 ந் திகதிக்கு முன்பு இணைப்பிரதிகளாக நமக்கனுப்பிவைக்கும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

| | பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|
| 1. | கா. முகம்மதலூவக்கர் | 2 ம் குறிச்சி | 1 ம் குறிச்சி P. W. D. றோட்டுக்கருகாண்மையில் |
| 2. | இ. சீனி முகம்மது | 2 ம் குறிச்சி | 2 ம் குறிச்சி P. W. D. றோட்டுக்கருகாண்மையில் |
| 3. | மு. இஸ்மா லெவ்வை | 3 ம் குறிச்சி | 1 ம் குறிச்சி P. W. D. றோட்டுக்கருகாண்மையில் |
| 4. | சு. இ. மு. ராவுத்தர் | 1 ம் குறிச்சி | 8 ம் குறிச்சி மார்க்கட் கடையில் |
| 5. | உ. காதர் முகையதீன் | 5 ம் குறிச்சி | 6 ம் குறிச்சி P. W. D. றோட்டுக்கருகாண்மையில் |

மீ. ம. முகம்மதலூவக்கர்,
கி. ச. அக்கிராசனர்.

கிராமச் சங்கக் காரியாலயம்,
அக்கரைப்பற்று மத்திய பிரிவு,
1958 ம் ஆண்டு டிசெம்பர்மீ 8 ந் வ.

---

## விளம்பரம்

1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பதால், 1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 26 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 22 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப் படுகின்றது.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மீ 6 ந் வ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.